TNGTA NAMAKKAL

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள், சென்னை–600 006.**

ந.க.எண். 45900 /டபிள்யு3/இ1 /2019 நாள் 16.08.2019

பொருள் தமிழ்நாடுமேல்நிலைக்கல்விப்பணி–2019–2020ம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் முதுகலை ஆசிரியர்களாக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்த நபர்களின் பெயர் பட்டியல் தயாரிக்க விவரங்கள் கோருதல் – சார்பு.

பார்வை அரசாணை (4டி) எண்.21, பள்ளிக் கல்வித்(மேநிக2) துறை, நாள் 02.11.2011

---

பள்ளிக் கல்வித் துறையில் உள்ள முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் பதவி உயர்வு பணிமாறுதல் மூலம் நியமனம் செய்யப்படும் 50% காலிப்பணியிடத்தில் 2% காலிப்பணியிடங்களை பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களில் முதுகலை ஆசிரியர் பதவிக்கான கல்வித் தகுதி பெற்றுள்ளவர்களை பணிமாறுதல் மூலம் 2% முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் பணி நியமனம் செய்ய பார்வையில் காண் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2019–20ம் கல்வி ஆண்டில் பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் முதுகலை ஆசிரியர்களாக பதவி உயர்வு வழங்க தகுதிவாய்ந்த நபர்களின் பெயர் பட்டியல் தயாரிக்க 01.01.2019 உள்ளவாறு முழுத் தகுதி பெற்றுள்ள அனைத்து அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களின் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (கலம் 1 முதல் 24 முடிய) பாடவாரியாக தனித்தனியாக தயாரித்து ஆவணங்கள் அடிப்படையில் சரிபார்த்து முதன்மைக் கல்வி அலுவலரின் மேலொப்பமிட்டு இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அவர்களிடம் நேரிடையாக ஒப்படைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகுதி பெற்ற பணியாளர்களின் விவரங்களைப் அனுப்புகையில் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனத்தில் கொண்டு பெயர் பட்டியல் தயார் செய்யும்படி முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1 பட்டியலில் இடம் பெறும் பணியாளர்கள் 31.12.2018 அன்று குறிப்பிட்ட பாடத்தில் முதுகலைப் பட்டப்படிப்பும், பி.எட்., பட்டப்படிப்பும் முடித்திருத்தல் வேண்டும். மேலும் தற்காலிகச் சான்று (Provisional Certificate) வைத்திருத்தல் வேண்டும்.

2 பட்டியலில் இடம்பெறும் பணியாளர்கள் 31.12.2018 அன்று தற்போதுள்ள பதவியில் பணிவரன்முறையும், கீழ்நிலைப்பதவியில் தகுதிகாண் பருவமும் முடித்திருத்தல் வேண்டும்.

3 வெளிமாநிலச் சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4 1.1.2013 பின் முதுகலையாசிரியர் பதவி உயர்வை நிரந்தரத் துறப்பு செய்தவர்களின் பெயர்கள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் இடம் பெறுதல் கூடாது.

TNGTA NAMAKKAL

5 அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கையில் அவர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் (வருடம் மற்றும் ரேங்க் எண்) தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். (நியமன ஆணையின் நகல் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்)

6 **இளங்கலைப் பட்டத்தில் இரட்டைப்பட்டப்படிப்பு (DOUBLE DEGREE/ADDITIONAL DEGREE) படித்தவர்களின் பெயர்களை பட்டியலில் சேர்க்கக் கூடாது.**

7 11+1+3 அல்லது 10+2+3 என்ற முறைப்படி கல்வித் தகுதிகள் பெற்ற பணியாளர்களின் பெயர்களை மட்டுமே பட்டியலில் சேர்க்க வேண்டும்.

8 பணியாளர்களின் பிறந்ததேதி, நியமனமுறை, கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விபரம் (17(a) அல்லது 17(b)) போன்றவற்றை உறுதி செய்து சரியாக அளிக்க வேண்டும்.

9 ஏதேனும் பாடத்தில் தகுதிபெற்ற ஆசிரியர் எவருமில்லை எனில் அப்பாடத்திற்கு "**இன்மை**" அறிக்கை தனியே தவறாமல் அனுப்பப்பட வேண்டும்.

மேலும் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் சார்பாக கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களை முதன்மைக் கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் சார்ந்த ஆசிரியரின் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(அ) பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகல்
(ஆ) தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணையின் நகல்
(இ) தமிழ் படித்த சான்றின் நகல்
(ஈ) பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள்.
(உ) பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சான்றுகளின் நகல்கள் (மதிப்பெண் பட்டியல் தேவை இல்லை–பட்டம், பட்டயம் மட்டும் தேவை).
(ஊ) வேறு மாநிலப் பட்டயச் சான்றாக இருப்பின், அதை மதிப்பீடு செய்யப்பட்ட (Evaluation) சான்றின் நகல்.
(எ) ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று.

முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் மட்டுமே முன்னுரிமைப்படி பரிசீலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பாட முதுகலையாசிரியர் பதவி உயர்வுக்கான பானலில் இடம் பெறுவார்களாதலின், இப்பொருளில் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி, மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி பணியாளர்களின் விவரப் பட்டியலை ஒரு முகாம் ஏற்பாடு செய்து சரியாகத் தயார் செய்து காலதாமதமின்றி இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) வசம் நேரில் சமர்ப்பிக்க அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **முன்னுரிமைப் பட்டியலில் பெயர் விடுபட்டதாகத் தெரிவித்து எந்த பணியாளர்களிடமிருந்தாவது முறையீடு ஏதும் பின்னர் பெறப்படின், அதற்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

தகுதிவாய்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்யும் முகத்தான், அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகைக்குட்பட்ட வசதியான பள்ளியில் அன்று முகாம் நடத்தி, தகுதியுடைய பணியாளர்கள் சார்பாக விவரங்களைப் பெற்று, கூர்ந்தாய்வு செய்து, தகுதிவாய்ந்தோர் முன்னுரிமைப் பட்டியல் தயார்செய்து, இணைப்பு (1) ல் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் (1–24 கலங்கள்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகளில் முதன்மைக் கல்வி அலுவலரால் மேலொப்பமிட்ட நகல்களுடன் தொகுப்புப் பட்டியலை பாடவாரியாக

TNGTA NAMAKKAL

மொழிவாரியாக தனித்தனியாக தயார் செய்து அவர்கள் சார்பாக தயார் செய்யப்பட்ட தகுதிவாய்ந்தோர் பெயர்ப்பட்டியலை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் II–ல் குறிப்பிடப்பட்டுள்ள 17 கலங்களில் எவ்வித மாற்றம் செய்யாமல் Excel Formatல் குறுந்தகட்டில் பதிவு செய்து, பதிவு செய்த குறுந்தகடு (CD) மற்றும் அச்சு நகல் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட பிரிவு உதவியாளர் மூலம், **31/08/2019 க்குள்** நேரில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கு மறு அஞ்சலில் ஒப்புதலைப் அனுப்புமாறு கோரப்படுகிறது.

இணைப்பு 1) படிவம் – I
2) படிவம் – II

**இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)**

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:–

1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த கல்வி இயக்ககம், சென்னை - 6.
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை - 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சென்னை–6
5. இயக்குநர், மெட்ரிக் பள்ளி இயக்ககம், சென்னை–6
6. இயக்குநர், மாநில வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6
7. அனைத்து கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்கள், ஒருங்கிணைந்த கல்வி.
8. கண்காணிப்பாளர், அ2 ,அ3 ,அ4 பிரிவு, பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6